# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

**Calendar** : **Case No.555/2014**
**Miscellaneous** :
**Summary Trial** :
**Maintenance** :
**Deposition of witness for prosecution** : **P.W.11.சீனியம்மாள்**

**Father's Name** : **உடைச்சி சேர்வை**

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**15.09.2021**

மு.வி:

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக தனிவிரல் ரேகை கூடத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2014 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் தனிவிரல் ரேகை கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது எழுமலை காவல் நிலைய குற்ற எண்.17-14, இதச பிரிவு 380 வழக்கு படி எனக்கு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து அழைப்பு எனது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விரல்ரேகை அவர்களுக்கு வந்து அவர் என்னிடம் மேற்படி வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்ய என்னை பணித்த காரணத்தினால் நான் சம்பவ இடத்திற்கு 04.02.2014 ஆம் தேதி காலை 7 மணிக்கு அழைப்பு வந்து 7.15 மணிக்கு அலுவலகத்திலிருந்து கிளம்பி சம்பவ இடத்திற்கு 9 மணிக்கு சென்றேன். அங்கு சம்பவ இடத்தை கூர்ந்து ஆய்வு செய்தேன். ஆய்வில் ஒரு விரல் பதிவு இரும்பு பிரோவின் மேல் பகுதியில் கிடைக்க பெற்று அதற்கு R1 என குறியிடப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. எழுமலை காவல் நிலையத்திலிருந்து கொடுக்கப்பட்ட குற்றம் நடந்த வீட்டில் உள்ளவர்களின் விரல்பதிவுகளும் எடுக்கப்பட்டு என்னிடம் வழங்கப்பட்டதை ஆய்வு செய்தேன். குற்றம் நடந்த வீட்டில் உள்ளவர்களின் விரல் பதிவுகள் R1 விரல் பதிவுகளுடன் ஒத்துப்போகவில்லை. பின்னர் சந்தேக நபரான வசந்தி த.பெ.பாண்டி என்பவரின் விரல் ரேகை பதிவு எங்களது அலுவலகத்திற்கு எழுமலை காவல் ஆய்வாளர் மூலம் 05.02.2014 ஆம் தேதி வழங்கப்பட்டது. அவற்றை ஆய்வு செய்யும்போது R1 விரல் பதிவானது வசந்தி இடது உள்ளங்கை விரல் ரேகையின் மேல் பகுதியுடன் ஒத்துப்போனது. அது குறித்து காவல் ஆய்வாளர் என்னிடம்

விசாரித்ததில் நான் தெரிவித்தேன். ஆனால் அவ்வாறு ஒத்துபோனது குறித்து நான் தனியாக கருத்துரை எதுவும் ஆய்வாளரிடம் நான் வழங்கவில்லை. நான் அவ்வாறு ஆய்விற்கு உட்படுத்திய ஆவணங்கள் தற்போது மதுரை விரல் ரேகை கூடத்தில் உள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி:

இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வு செய்ய எனக்கு எழுத்து மூலமாக தகவல் வந்ததா என்றால் இல்லை தொலைபேசி மூலமாக தகவல் வந்தது. பொதுவாக எழுத்து மூலமாக தான் தகவல் தெரிவிப்பது வழக்கம் என்றால் இன்றைய கால கட்டத்தில் அவ்வாறு எழுத்து மூலமாக தகவல் தெரிவிப்பதில்லை. தொலைபேசி மூலமாக தான் தகவல் தெரிவிப்பார்கள். அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. பொதுவாக முதல் தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத நபர்கள் எதிரிகளாக குறிப்பிட்டு இருந்தால் விரல் ரேகை பிரிவிலிருந்து வரவழைத்து சம்பவ இடத்தில் விரல் ரேகை பதிவுகளை ஆய்வு செய்து அதன்பிறகு எதிரிகளை அடையாளம் காண்பார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக வசந்தியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. பீரோவில் மேல் பகுதி என்பது பிரோவின் முன்பகுதியின் மேல் பகுதியாகும். பீரோவின் கைப்பிடி, பீரோவின் உள்அறையின் கைப்பிடி மற்றும் சாவி ஆகியவற்றை ஆய்வு செய்தேனா என்றால் நான் ஆய்வு செய்தேன் ஆனால் மேற்படி இடங்களில் விரல் ரேகை பதிவுகள் இல்லை. குற்றம் நடைபெற்ற வீட்டிலிருந்த நபர்களின் கைரேகைகள் பீரோவில் காணப்பட்டதா என்றால் இல்லை. எதிரியின் கைரேகை எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு எனக்கு வழங்கப்பட்டதா என்றால் 04.02.2014 ஆம் தேதி எடுக்கப்பட்டதாக எனக்கு குறிப்பிட்டு வழங்கப்பட்டது. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் கைரேகை பதிவுசெய்யவில்லை என்றும் எதிரியை கைதுசெய்து அதன்பிறகு அவரிடமிருந்து கைரேகை பெறப்பட்டு அதன்பிறகு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பீரோவை தவிர சம்பவம் நடந்த வீட்டில் வேறு இடங்களில் எதிரியின் கைரேகை இருந்ததா என ஆய்வு செய்தேனா என்றால் ஆய்வு செய்தேன் ஆனால் மற்ற இடங்களில் எதிரியின் கைரேகை இடம் பெறவில்லை.

ம.வி:

இல்லை.